News and Articles in Tamil and English Please send them to:

THE EDITOR,

'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q / J / 104 / News / 89

Established ; 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol:- 155 Jaffna, Friday 08, April 1994 No : 08

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs. 100/-
For Advertisements
Apply to:
THE MANAGER
The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

# MRS WINSLOW PIONEER OF WOMENS EDUCATION

Mrs. Harriet W. L Winslow poured out her life without stint in the service of the Master. She was the pioneer of Women's education in Asia. She was the founder and first Principal of Uduvil Girl's College. Her 200th Birth anniversary in 1996 must be Celebrated as a national event.

So observed Bishop Jebanesan at the Harriet Winslow day conducted by Uduvil Girls College on the 9th April. His talk was followed by a play by the students of Uduvil Girls College depicting the life and work of Mrs. Harriet Winslow and her husband Rev. Miron Winslow. The meeting was presided over by Mr. A. Kadirgamar the manager of the school. The opening prayer was offerd by the Rt. Rev. D. J. Ambalavanar. Tea and short eats were served to all those present by the Children of Harriet Winslow Home for girls.

## DATES TO REMEMBER

**May 5th Thursday**
Releasing of two Books - Jaffna Town.

**May 7th Saturday**
Special Diocesan Couneil Vaddukoddai.

(See page 8)

## ETHIR RETURNS TO JAFFNA

One time Olympic champion N Ethirveerasingham, a Centralite old boy returns to Jaffna after three decades or more of staying in the U. S. A. He was an Agricultural Professor in the United States. Now he hopes to spend a year at the Jaffna Agricultural Faculty in Kilinochchi and help to streamline the studies which indirectly will boost our agricultural growth on scientific methods. Dr. Ethirveerasingham was elected as one of the vice - Patrons of the Jaffna Central College old Boy's Association.

### President's politiking

The news in a government controlled paper condemns the actions of the Sri Lankan President in his Southern electioneering campaign for having tried to use the ethnic problem as his trump card and which had no effect on the Southern voters who rejected it wholesale.


### Price of Rice comes under control

The country rice sold in the shops and markets are not to exceed Rs. 29 . 50 per. Kg It was announced by those authorities for Sales Control.

## New Secretary General of The Anglican Communion

The Archbishop of Canterbury, the Most Revd George L Carey, with members of the Standing Committees of the Anglican Consultative Council (ACC) and the Primates of the Anglican Communion, has appointed the Very Revd John L Peterson of Jerusalem as the next Secretary General of the Anglican Communion. The Dean will succeed the Revd Canon Samuel Van Culin who will retire in December 1994 after twelve years in office.

The Most Revd Brian Davis, Archbishop of Aotearoa, New Zealand and Polynesia, chaired an international committee that met on 17 March at Lambeth Palace to consult with the Archbishop. The selection group unanimously approved the appointment of Dean Peterson and the Standing Committees also confirmed the decision with one voice. The Anglican leaders have been meeting in Guildford during the past week.




## REFUGEES OF THE WORLD

It is estimated that there are about 16 Million Refuges in the world today. Information about most of them - where they are and where they come from - is given below

| Host Country | No of Rufugees | Some Conntries of origin |
|---|---|---|
| PAKISTAN | 3 275 700 | Afghanistan |
| IRAN | 2 850 000 | Afghanistan, Kurds |
| USA, CANADA | 1 447 200 | El Salvador, Gautemala Vietnam |
| EUROPE | 884 000 | Turkey, Africa, Hong-Hong, Sri Lanka, Vietnam |

(See page 8)

## UNIVERSITY OF JAFFNA

Five Students who followed chemistry special degree course obtained first classes. All of them were appointed temporary assistant lecturers. Two of them viz. Anton Rajakariyar and Santhalingam Suthahary are old students of Jaffna College.

## Increase in the Birthrate of Women

According to the district registran's report, 13491 Babies were born in Jaffna in the year 1993 of whom 54% were girls. The percentage of Females who died was 49% 6019 persons died in Jaffna District in 1993.

### Purchase of F-16

The Indian Prime Minister deplored the actions of Sri Lanka and Pakistan in the race to Purchase arms and F. 16 bombers from China and America Further, he pin-pointed Sri Lanka's president's visit to China will not help good neighbourly relations between India and Sri Lanka.

### To Cross Palk Strait

An Indian newspaper says a a bold bid to cross the Palk Strait is made by a twelve year old lad named Kuttaleswaran. He is given all help by the governments of India and SriLanka,

## WEDDING

**Jeyarajasingam - Suhanthini**

The marriage between Suhanthini Arumainayagam and Sinnathurai Jeyarajasingam was Solemnized at the Navaly Church by he Rev. V N. Tharmakulasigam on 11th April 1994.

### Jitters in Jaffna on the 13 th April

At about ten - thirty a. m. an Avro airplane was surveying the Jaffna Peninsula. Those who were purchasing for the New Year left the town area in a great hurry;

*A letter to the Editor, Morning Star*

## FOR THE SAKE OF THE GRACE GIVEN TO ME: ESSAYS IN HONOUR OF BISHOP AMBALAVANAR

I received by post this week and wish to say to those responsible that it was to me a few hours of immensely enjoyable reading for three main reasons:

Firstly it contained personal tributes to the first episcopally ordained C. S. I. Bishop in Jaffna, who ordained me first as his Presbyter. He said that he felt more like a Bishop after my ordination because he had two Presbyters younger than himself in the Diocese (When he became Bishop he was the youngest but one). I thought I knew much about the Bishop but reminiscences of Rajan Kadirgamar and Earnest Champion about his colourful youth and student days, and observations on his intellectual stature and stamina, commitment to the noblest causes, his courage and fortitude through the most disappointing experiences and devastations as noted by his successor Bishop Jebanesan and other stalwarts of Jaffna's ecclesiastical and academic elite were a fund of additional information helpful to gain a fuller appreciation of this giant personality.

Secondly, the contributors happen to be those whom I hold in very high esteem - quite a few of them my own teachers and colleagues from the Ceylon University, UTC and TIS – Bishop Sam Amirtham, Prof C. J. Eliezer, Wesley Ariarajah and Dayanchand Carr to name just four. Now they are outstanding personalities in their fields of vocation / ministry and well worthy of their offices, I have some knowledge of their philosophies and familiarity with their pet themes. It was therefore refreshing to know of their current thoughts and be posted on the latest developments in those matters as discussed in the ecumenical circles.

Thirdly, and rather related to the second, the contents of the book was such that I wanted to read it all in one go - so absorbing, relevant and near to my heart were the topics treated by the contributors. As an active member of the Ceylon Tamil Association of Australia which is most concerned about the plight of our people back home and as a practising Anglican priest I could not have laid hands on a more exciting collection of concise articles to stimulate thinking and feed the mind.

I thank the authors and publishers of the Festschrift.

Adelaide, **The Rev. S. N. Sugunanathan**
South Australia.
23 - 3 - 94

★

Editor

Dear Sir,

Kindly publish the letter enclosed in your esteemed journal. We are sending this letter to the Secretary Ministry of Education & Higher Education.

### Proposed Merger of G. T. C. Kopay and Palaly

We wish to put forward the following submissions for your kind consideration. We would also like to register our protest against the proposal to amalgamate the two Teachers' Colleges in the Jaffna District.

1) The two Teachers' Colleges are both involved in the teaching of different courses of studies. Their amalgamation will greatly hamper the facilities provided for various courses with their intrinsic resource needs.

2) The number of teacher - trainees sent to Teachers' Colleges waxes and wanes depending on the circumstances. It has been so in the past. We do not think a merger is needed or warranted.

3) The Jaffna District earlier had five Teacher Training Colleges. They were subsequently reduced to two. A further reduction will amount to a depletion of the educational resources of the area.

4) The new educational reforms suggested by the consultative Committee of the Asian Development Bank (1993) recommends the need for the re - training of trained teachers and continuing education. These Teachers' Colleges could also be utilised for such purposes.

5) There is a need for the establishment of a College of Education in the heartland of the Jaffna peninsular. One of these Teachers' Colleges could in addition be expanded to serve as a College of Education. A few Teachers' Colleges in the South and East are performing these dual functions.

We therefore appeal to you to allow these two Teachers' Colleges to function as Separate institutions. Jaffna area has already suffered innumerable deprivations. The merger of the Teachers' Colleges would therefore mean an additional educational deprivation.

We implore you to give serious consideration to our submissions before you take any decision on this matter.

(Sgd) President

Yours Faithfully,
S. Sundarampillai
Secretary

## WHY AND HOW ON EARTH?

*Because the 'establishers' of 'God's reign on the earth'*
*Have taken refuge in 'active pacifism',*
*Because the "Peace Makers" have forgotten,*
*The suffering role of 'Messianism'*
*Because the 'Rich people' of the 'Top World'*
*Arm the 'Poor Lazarus' of the Nether world,*
*The image of God is denied today*
*In our comrades in the 'Global village'.*

*Because the luxury and the abundance,*
*Have become the 'necessities' for 'Christians'*
*And sharing of 'wealth' that belongs to God,*
*Is branded as 'charity to the poor'*
*Because the 'Marxist' song of the 'Jubilee year'*
*Is silenced by the 'Spirituals' dear,*
*Hunger and death that exist around us,*
*Have hit the toll of today's world.*

*When 'Repentance' becomes just a 'Liturgy'*
*And family and friends become the 'priority'*
*When the message of love is just in 'Preaching'*
*And 'Going the second mile' becomes 'Aching'*
*When the stewards of God deny suffering,*
*And take the path of 'Comfortable Compassion'*
*How would you expect the reign of God*
*To be establised in today's world?*

Thaya Thiagarajah

## WCC central committee calls for new policy on Uprooted People

The Central Committee of the Word Council of Churches (WCC) has requested elaboration of a major policy statement on refugees migrants and displaced persons. The governing body of the WCC voted during its meeting held January 20-28 in Johannesburg, South Africa for the articulation of new policy lines to respond to "uprooted people."

The Central Committee recognized the need for a new church policy statement and fresh approaches to the growing world crisis involving 20 million refugees, 30 million internally displaced people and tens of millions of migrant workers.

The statement, to be presented to the next Central Committee meeting in Nashville, Tennessee, in September, 1995, will include a new understanding of who are the "uprooted people" of concern to the churches. It will recommend specific ways in which churches can protect uprooted people, uphold their dignity and challenge increasing hostility to foreigners in many parts of world.

Between now and the next Central committee meeting, a participatory process is to be conducted involving churches, action networks and local congregations in the formulation of the new policy statement. This process will stress the importance of involving the marginalized and uprooted people in the formulation of the policy.

This decision was one of numerous taken during the Central Committee meeting, the first of a WCC governing body in South Africa. The meeting came after more than thirty years of concerted campaigning by the WCC against the apartheid system. During the meeting, church representatives expressed the gratitude of Christians in South Africa for the support provided by the WCC and its member churches over the years of the intense struggle against the violence and oppression of apartheid.

During its sessions, the Central Committee addressed extensively several current international concerns, notably Africa, South Africa, the former Yugoslavia and issues of global warming. Plenary presentations highlighted seven areas of ongoing ecumenical concern, including issues of faith, WCC-Roman Catholic relations, the laity, vio-

( See page 7 )

# செய்திச் சிதறல்

## ஜனாதிபதியின் போர் வெறி

வடகிழக்குப் பகுதியில் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா சிறிதும் விரும்பவில்லையென்று பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது விடயமாகத் தென்பகுதியைச் சேர்ந்த தொழில்சார் வல்லுநர்கள் ஜனாதிபதியை சந்தித்துப் பேச மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது. ஜனாதிபதிக்குத் தேர்தல் வெறியும், போர் வெறியும் அதிகரித்துவருகிறதே தவிர நர்ட்டின் சுமுகமான சமாதான வாழ்வு குறித்து அவர் அக்கறைப் படவில்லையெனக் கொழும்புப் பத்திரிகைகள் சாடியுள்ளன. ஒருபுறம் இராணுவ அதிகாரிகாரிகளின் ஆலோசனையைப் பெறுவதும், மறுபுறம் அரசியல் கட்சிகளுக்கிடையே சிண்டு முடிந்துவிட்டு வேடிக்கை பார்ப்பதும், இதற்காகப் பெரும் பணம் செலவிடப்படுவதும் புரியாத புதிராக உள்ளன என இப்பத்திரிகைகள் குற்றஞ் சாட்டியுள்ளன. ஜனாதிபதி டிங்கிரிபண்டா விஜேதுங்கா ஒருபோதும் சமாதானத்தை நாட மாட்டார் என்பது அப்பட்டமான உண்மை என்று அரசியல் அவதானிகள் விவரிக்கின்றனர்.

## ஹேமா பிரேமதாசா

அரசியலில் அன்றும் இன்றும் திருமதி ஹேமா பிரேமதாசா 'புரியாத புதிராகவே' இருந்து வருகிறார். மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலையுடன் 'ஓரங்கட்டப்பட்ட' அவர் இப்பொழுது மீண்டும் அரசியல் 'ஹோதாவில்' படு 'குஷி'யுடன் குதிக்கப் போவதாக அறிவித்துள்ளார். தாம் மட்டுமல்ல, தமது மகனும் மகளும் அரசியலில் தீவிரமாக ஈடுபடப்போவதாகவும் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி தம்மையே ஜனாதிபதி வேட்பாளராகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார். இதற்கிடையே முன்னர் இவரது தீவிர ஆதரவாளராகக் கருதப்பட்ட அமைச்சர் சிறிசேனகூரேக்கும் இவருக்குமிடையே இப்போது சுமுகமான உறவில்லையெனக் கூறப்படுகிறது அத்துடன் ஹேமா பிரேமதாசா குடும்பத்துடன் பிரிட்டன் சென்று வசிப்பதற்கான நிரந்தர விசா பெற்றுள்ளார் என்றும் ஒரு பத்திரிகைச செய்தி தெர்விக்கிறது. அரசியல் வாதிகளையும், சினிமா நடிகர்களையும் பொதுமக்களைப் பாதுகாப்பதற்காகத் ''தனிப்பட்ட சரணாலயத்திற்கு'' அனுப்ப வேண்டும் என்று மூத்த ஒரு பத்திரிகையாளர் நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.''

## சுவிஸ் அகதிகள் திரும்புதல்

சுவிற்சர்லாந்திலிருந்து அகதிகள் திருப்பியனுப்பப்படுதல் நிச்சயமாகிவிட்டது ஆகப்பிந்திச் சென்றவர் முதலில் அனுப்பப்படுவார்களாம் இதற்கமைய' அடுத்தமாத முதல் வாரத்தில் சுவிஸ்ஸிலிருந்து முதலாவது தொகுதி அகதிகள் கொழும்பு வந்தடைவர் என அறிவிக்கப்படுள்ளது.

## அரசசார்பு ஆதரவும், எதிர்ப்பும்!

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளிற் சில ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவை ஆதரிக்க' வேறு சில பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை ஆதரித்து எழுதி வருகின்றன. தென்மாகாணத் தேர்தல் தோல்விக்கு ஜனாதிபதி டி.பி.யின் கடைந்தெடுத்த 'இனவாதப் பிரசாரமே காரணம்' என்று இவை பகிரங்கமாகக் கண்டித்துள்ளன. அரசு சார்புப் பத்திரிகைகள் இவ்வாறு 'கன்னை' பிரிந்து எழுதுவது பல ஆண்டுகளுக்குப் பின் இப்பொழுதே இடம்பெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இந்து ஆலயங்கள் சேதம்

''வடகிழக்கு யுத்தத்தினால் இதுவரை 1500க்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் சேதமடைந்துள்ளன இதனைப்பற்றி அரசுக்கு எடுத்துக் கூறப்பட்டபோதும் அவற்றைப் புனர்நிர்மாணம் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் சர்வதேச ரீதியில் இந்த அரசிற்கு அவமானமேற்பட்டுள்ளது !'' என்று இந்துசமய, கலாச்சாரததுறை இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அண்மையில் பி.பி.ஸி வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். சேதமடைந்துள்ள கோவில்களைப் பழுதுபார்க்க நிதிப்பற்றாக்குறையே பிரச்சனையாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இந்து ஆலயங்கள் தவிர்ந்த கிறிஸ்தவ தேவாலயங்கள், முஸ்லீம் மசூதிகள் பன்னூற்றுக்கணக்கில் சேதமடைந்துள்ளமையும் கவனத்துக்குரியது என்பதனை நாம் சுட்டிக் காட்டுதல் அவசியமானது.

## செல்லச்சாமி போர்க்கொடி!

ஜனாதிபதி - தொண்டமான் சந்திப்பு நேர்ந்தகையோடு இதொ. காவில் இருந்து 'பிரஷ்டம் செய்யப் பட்டுள்ள' இராஜாங்க அமைச்சர் திரு. செல்லச்சாமி கட்டமான பத்திரிகை அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். ''திரு.தொண்டமானை அமைச்சரவையிலிருந்து விலக்க வேண்டும். அவர் அமச்சரவையின் கூட்டுப்பொறுப்பை மீறிவிட்டார். அரசியலிலிருந்துகொண்டே அரசுக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றார்!'' என்று அவர் ஐக்கிய தேசியக்கட்சிப் பொதுச்செயலாளர் அமைச்சர் சிறிசேன கூரேக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### கல்வி எனும் கோபுரம் அழியமாட்டாது

''என்னை இந்த மண் தான் உருவாக்கிற்று. இன்று இந்த மண்ணிற்கு மீண்டும் திருப்பியுள்ளேன். யாழ். மத்திய கல்லூரி என்னை வளப்படுத்தியது. நான் இரண்டு கோபுரங்களைக் கட்டினேன் ஒன்று கல்வி, மற்றது விளையாட்டு. இரண்டாவது கோபுரம் ஓரளவு முற்றுப்பெற்றது விட்டது. ஆனால் கல்வி எனும் கோபுரம் அழியமாட்டாது.,

இவ்வாறு நீண்ட காலத்திற்குப் பின் யாழ்ப்பாணம் வந்துள்ள கலாநிதி எதிர்வீரசிங்கம் யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் அவருக்களித்தவரவேற்பு உபசாரத்தில் குறிப்பிட்டார்.

ஆசிரியருக்குக்கடிதம்

# தந்தை செல்வா ஜனன நூற்றாண்டுவிழா - 1998

தனது தேசிய வீரர்களை, தலைவர்களைப் பெரியார்களை போற்றிக் கௌரவித்து வராத எந்த இனமும் தலையெடுத்து வாழ்ந்ததாக வரலாறு கிடையாது. அந்த வகையில் நன்றியுடைய தமிழீழ மக்கள் தந்தை செல்வாவின் ஜனன நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், அதன் நிமித்தம் ஒரு விழாக்குழு அமைக்கப்படவேண்டிய தேவையைச் சுட்டியும் ''MORNING STAR'' பத்திரிகையில் ஓர் ஆசிரியர் தலையங்கம் அதன் அடுத்த இதழில்தானே வெளிவர சம்பந்தப்பட்ட வட்டாரத்தினை ஊக்குவிக்கும்படி பிராத்திக்கின்றேன்.

தந்தை செல்வாவின் ஜனன நூற்றாண்டு விழாவையொட்டி தந்தை செல்வா நடப்பித்த பொதுப் பணிகள் குறித்த இலக்கியங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் நிறைய வெளிவர வேண்டும். தமது தேச பிதாவின் அருமை பெருமைகளை எதிர்காலத் தமிழ்ச்சந்ததி தெரிந்து புரிந்து கொள்ளும் பொருட்டாக அந்த வகையில் சமீபத்தில் பேராசிரியர் ஏ. ஜே. வில்சன் லண்டனில் வைத்து வெளியிட்ட தந்தை செல்வாவின் வாழ்க்கை வரலாறு ஒரு தகுந்த முன்னோடியாக அமையலாம்.

இத்தீவு சுதந்திரம் அடைந்ததாக வர்ணிக்கப்படும் 1948 பெப்ரவரி 4 ம் திகதி கொழும்பில் இருந்து வெளிவரும் ''வீரகேசரி'' பத்திரிகையில் தந்தை செல்வா தீட்டிய கட்டுரை அந்த வகையில் மறுவெளியீடு செய்யப்படலாம் யாழ்ப்பாணக் கல்லூரி நூலகத்தில் மேற்படி பத்திரிகையின் பிரதி கிடைக்கக்கூடியதாக இருக்கும் என நம்புகிறேன்.

மேலும் இந்திய வம்சாவழியினராகிய மலையகத் தமிழ் மக்களைப் பாதிக்கும் வகையில் பராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட குடியுரிமை, பிரஜாவுரிமை மசோதாக்கள் மீதும் (2) இத் தீவுக்கான ஒரு தேசியக் கொடி மீது அங்கு நிகழ்ந்த விவாதத்திலும், அதுபோன்ற முடிக்குரிய காணிகள் மீது அரசு நடத்தி வந்த சிங்களக் குடியேற்றங்களை ஆட்சேபித்தும், 1972 அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்ட காலகட்டத்தில் தேசிய நிர்ணய சபையிலும் தந்தை செல்வா ஆற்றிய உரைகள் அனைத்தும் ஒரே தொகுதியாக தொகுக்கப்பட்டு நூலுருவில் வெளிக்கொணரப்பட வேண்டிய தேவையை உணர்த்தவும் தங்கள் தலையங்கம் பயன்படுமாக.

தந்தை செல்வா நூற்றாண்டு விழாவுக்கான குழுக்கள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல மட்டங்களிலும் செயற்படலாம். அவர் கல்வி கற்ற கல்லூரியின் பழைய மாணவர் அமைப்புக்கள் தாமாகவே ஒரு சிறப்பு மலரை, உருவாக்க அவர் பிறந்த நாடாகிய மலேசியாவும், வாழ்ந்த ஊராகிய தெல்லிப்பளையும் கூட தனித்துவமாக தத்தமது சிறப்பு மலர்களை வெளியிடு செய்து வைக்கலாம். அதற்காக அனைவரையும் இப்போ திருந்தே செயற்பட ஊக்குவிப்பதாக ''உதயதாரகை'' ஆசிரியர் தலையங்கமும் அமைந்து தமிழீழத்துக்கு வழிகாட்டவும், தமிழ் மக்களை நெறிப்படுத்தவும் செய்யலாம்.

சா. ஆ. தருமரத்தினம்

## ஜனாதிபதி - தொண்டமான் முத்தமிடல்

நீண்டகால அரசியல் இடைவெளிக்குப்பின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவும் இ.தொ.கா. தலைவர் தொண்டமானும் கடந்த வாரத்தில் வெகுநெருக்கமாகச் சந்தித்துக் கொண்டனர். அச்சந்திபின் போது ஜனாதிபதி தொண்டாவை கட்டியணைத்து முத்தமிட்டு வரவேற்றார். தொண்டமானின் பேரனான திரு.ஆறுமுகமும் அப்போது உடனிருந்தார். '' நாமிருவரும் 70 வயது கடந்தவர்கள். இனியும் வேறுபட்டுநிற்கக்கூடாது. ஒற்றுமையாகச் செயற்படுவோம்!'' என்று ஜனாதிபதி தம்மிடம் கூறியதாக திரு. தொண்டமான் பின்னர் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார். அரசியல் ரீதியில் இருவரும் என்ன பேசிக்கொண்டார்கள் என்பது பூரணமாக வெளிப்படவில்லை.

## நூல் வெளியீடு

தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சர் கலாநிதி எஸ். ஜெபநேசன் எழுதிய 'யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவ கவிஞர்களும் கீர்த்தனைகளும்' என்ற ஆராய்ச்சி நூலும், முதுபெரும் எழுத்தாளரும் கவிஞருமான திரு நாவேந்தன் எழுதிய 'மகதலேனாமரியாள்' குறுங் காவிய நூலும் மே மாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை ஒரே மேடையில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன. இவ் வெளியீட்டு விழாவில் பெருந் தொகையான பல்கலைக் கழக மாணவர்களும், எழுத்தாளர்களும், இலக்கிய ரசிகர்களும், சமய குரவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொள்வர் எனத் தெரியவருகிறது. நூல்களின் வெளியீட்டுரைகளைப் பிரபலம் பெற்ற பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் நிகழ்த்தி விமர்சனஞ் செய்வரெனவும் அறியப்படுகிறது. இவ்விரு நூல்களும் தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனத்தின் வெளியீடுகளாகும்.

'புங்கையூரன்'

## இந்தியப் பத்திரிகைகள்

இந்தியாவில் செய்திப் பத்திரிகைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. 1991 இல் பத்திரிகைகளின் எண்ணிக்கை 30,214 ஆக இருந்தது. 1992 இல் அது 31,957 ஆயிற்று. பத்திரிகைகளின் அதிகரிப்பு இந்த வருடத்தில் 16.6 சதவீதமாக உயர்ந்தது. நடைமுறையில் வெளிவரும் பத்திரிகைகளின் எண்ணிக்கையிலும் வளர்ச்சி அதிகரித்துள்ளது. ஹிந்தி மொழிகளில் மிகக் கூடுதலான பத்திரிகைகள் வெளிவருகின்றன. ஹிந்தியில் 11,638 பத்திரிகைகள் வெளிவருகின்றன. ஆங்கிலத்திற்கு இரண்டாவது இடம். அதன் எண்ணிக்கை 5,139 ஆகும். மலையாள மொழியில் 178 தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இந்தியாவில் 96 மொழிகளில் பத்திரிகைகள் வெளிவருகின்றன. மிக அதிகமான பத்திரிகைகள் வெளிவரும் மாநிலம் உத்திரப் பிரதேசம். இங்கு 535 பத்திரிகைகள் வெளிவருகின்றன.

— சுபமங்களா



தந்தை செல்வா

# தீர்க்கதரிசனம் வாய்ந்த — பெருந்தலைவர் செல்வா!

*(31 — 3 — 94 தந்தை செல்வாவின் ஞாபகார்த்த ஆராதனையில் ஆற்றிய உரை)*

திரு. சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் என்ற மிக நீண்ட பெயரை தமிழ் மக்கள் எஸ். ஜே. வி. என்றும், செல்வா என்றும், தந்தை என்றும் அழைத்தனர். தந்தை செல்வா மலேசியாவில் பிறநதவர். இவரின் தந்தையார் வேலுப்பிள்ளை தொழில் காரணமாக மலேசியாவில் தங்கிவிட்டார். பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொண்டமை யால் தாயும் பிள்ளைகளும் சொந்த ஊரான தெல்லிப்பளைக்குவந்தனர். செல்வாவின் தாய்மாமனார் வணக்கத்திற்குரிய எஸ் கே. பொன்னையாவின் பாதுகாப்பிலும், வழிகாட்டலிலுமே இவர் வளர்ந்து வந்தார். தந்தையின் அன்பும வழிகாட்டலும் இவருக்கு கிடைக்காத போதும், தாய் மாமனாரின் வழிகாட்டலே இவருடைய வாழ்க்கையில் அதிகம் செல்வாக்கு செலுத்தியது. இவரது பாடசாலை நாட்களிலேயே இவர் பாடங்களை மிக அக்கறையோடும், ஆர்வத்தோடும் கற்றார். இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டம் பெற்றதும் ஆசிரியராகத் தொழில் புரிந்தார். சென் தோமஸ் கல்லூரியிலும், யாழ்ப்பாணக் கல்லூரியிலும் சில காலம் ஆசிரியராகத் தொழில் புரிந்தார். பின்னர் சட்டம் பயின்று தகைமை பெற்றார். கொழும்பில் வாழ்ந்தபோது பிரபல்யம் வாய்ந்த தமிழ் யூனியனில் உறுப்பினராகிக் கொழும்புச் சமுதாயத்தின் உயர்மட்டத்தவரின் தொடர்பும், நட்பும் பெற்றார். ஆயினும் இவை எல்லாவற்றையும் விட அவருடைய உள்ளுணர்வு தமிழ்த்தேசிய இனத்தின்மீதே இருந்தது.

தந்தை செல்வா ஒரு தலைசிறந்த சிவில் சட்டவியல் அறிஞர். இத் துறையில் தளராத ஈடுபாடு கொண்டிருந்தார். அத்துறையில் அவர் பெரும் வெற்றியும் பெற்றிருந்தார் இதற்காக 1946ஆம் ஆண்டு "இராணி வழக்கறிஞர்" எனும் பட்டம் கிடைத்தது. இவர் சட்டத் துறையில் கால் வைத்தபோது உயர் நீதிமன்ற நீதியரசராக வரவேண்டும் என ஆசைப்பட்டார். அப்பதவி 1946 - 1948க்கும் இடையே மூன்று தடவைகள் அவரைத் தேடிவந்தன. ஆனால் அப்போது அவர் தமிழ்த் தேசியக் கடல் அலைகளில் மிக ஆழ்ந்திருந்தார்.

தந்தை செல்வா அரசியலைத் தேடி வந்தவரல்லர். இயற்கையில் ஏற்பட்ட அரசியல் வெற்றிடம் இவரின் ஊடாக நிரப்பப்பட்டது. "தமிழ் மக்களுக்கு தவறாக வழிகாட்டப்பட்டது என்றும் தம்மில் ஒரு முக்கிய பகுதியின் வாக்குரிமை பறிக்கப்படுவதற்கு அவர்கள் தம்மை அறியாமலே பங்காளிகளாகி விட்டனர் என்றும், தமது பாரம்பரியத் தாயகத்தில் சிங்கள அரசாங்கம் சிங்களக் குடியேற்றங்களை அமைக்க அனுமதித்து விட்டார்கள், எனவே மீண்டும் ஒரு முறை அவர்கள் தவறாக வழிகாட்டப்படலாம் என்றும், இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறக் கூடாது தடுப்பதே தனது பணி என்றும் அவர் உணர்ந்தமையால் அரசியலில் அவர் தீவிரமாக ஈடுபடலானார்.

தந்தை செல்வா தனது சமயத்தில் ஆழமான விசுவாசமும், நிறைவான வாழ்க்கையும் பெற்ற ஒரு மாமனிதன். இவர் உண்மைக் கிறிஸ்தவனாக நடைமுறை உலகில் வாழ்ந்தவர். இவர் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டும் சமய ஒழுக்க விசுவாச நெறிகளில் இருந்து எந்த வகையிலும் ஒதுங்கிக் கொள்ளவில்லை. பெரும்பான்மை இந்துக்களுக்குத் தலைமை தாங்குவதில் அவர் தனது கிறிஸ்தவமதக் கொள்கையில் தொய்வுகாட்ட மறுத்துநின்றார். ஒருமுறை திருமதி பண்டாரநாயக்காவுடன் ஏற்பட்ட சொற்போரில் தந்தைசெல்வா 'தமக்குத் தலைமை வகித்து வழிநடத்துவதற்காக தமது தலைவர்களைத் தமிழ் பேசும் மக்கள் மதம் மாறும்படி நிர்ப்பந்திக்கவில்லை. இது தமிழ் பேசும் மக்களின் பெருமைக்குரிய விடயமாகும்'' என்று கூறினார். தந்தை செல்வாவிடம் இருந்த மற்றொரு இயல்பான அம்சம் மனிதர்களால் முடியாத காரியங்களைக் கடவுளிடம் ஒப்படைப்பதாகும். சோதனையான காலங்களில் அவர் கடவுளையே அழைப்பார். 1970ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் பின் 'தமிழ் இனத்தை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்' என்றார்.

1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி தமிழ் அரசுக் கட்சியின் ஆரம்பக் கூட்டத்திற்கு தந்தை செல்வாவே தலைமை தாங்கித் தலைமையுரை ஆற்றினார். பலமுறை தலைவர்கள் எங்களைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள். வீரர்களாகத் தோற்றமளித்து மக்களின் நம்பிக்கைகளைக் பெற்ற தலைவர்கள் ஒருநாள் நிமிர்ந்து நின்று போராடி, மறு நாள் களத்தை விட்டு ஓடி விட்டனர். இனித் தமிழ்த் தலைவர்களை எப்படி நம்புவதென மக்கள் கேட்கின்றார்கள்." என்று கூறினார். தமிழ்த் தலைவர்களில் மக்கள் நம்பிக்கை இழந்த ஒரு நிலையிலேயே தந்தை செல்வா தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

இவரிடம் ஒரு சிறந்த தலைவருக்குரிய அனைத்து அம்சங்களுடன் மேலதிகமாக ''வசீகரத்தலைமைத்துவம்'' இருந்தது. இதனால் தந்தை செல்வாவிடம் மக்கள் அன்பும் பக்தியும் கொண்டிருந்தனர், மதிப்புணர்வை விட வணக்க உணர்வே மேலோங்கியது நம்பிக்கை என்பதை விட விசுவாசமே கொண்டிருந்தனர். 1956 முதல் 1977 வரை தந்தை செல்வாவின் திசையில் மக்கள் வழிநடந்தனர். இந்தியாவில் எவ்வாறு மகாத்மாகாந்தி மக்கள் அனைவரையும் இணைத்து பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிராகப் போராட்டங்களை 1920 — 1942 காலத்தில நடத்தினாரோ, அதே போலத் தந்தை செல்வாவும் 1956-1977 வரை பல மக்கள் போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றார்.

இந்த மாபெரும் சாதனையை எவ்வாறு அவர் சாதித்தார்? அவர் ஒரு நோயாளி, செவிப்புலன் குறைந்தவர். குரல் தணிந்தவர். இத்தகைய குறைபாடுகள் இருந்த போதும் தமிழ் மக்கள் போற்றுவதற்குரியவரானார். அமெரிக்கா ஜனாதிபதி பிராங்லின் ரூஸ்வெட் போலியோ நோயால் தாக்குண்டவர். இடுப்பில் இருந்து பாதம் வரை அவருக்குப் பாரிசவாதம். இதனால் நடக்க இயலாதவர், சில்லுக் கதிரையில் வைத்துத் தள்ளப்பட்டவர். அவரை அமெரிக்க மக்கள் நேசித்தனர். நான்கு முறை தொடர்ச்சியாக, ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே போன்று தமிழ் பேசும் மக்களும் செல்வாவை நேசித்தார்கள். தந்தை எங்களைக் கைவிடமாட்டார் என நம்பினார்கள். தமிழ் மக்கள் தந்தை செல்வாவை ஒரு மீட்பராக, இரட்சகராக, தீர்க்கதரிசியாகக் கண்டனர்.

இலங்கைத் தமிழ்த்தேசிய இனம் ஒன்றுளது என்று நிறுவினார். முன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

— எஸ் சகாயசீலன் —

---

தென் இந்திய திருச்சபை — யாழ். திருமண்டலம்

சமயக் கல்விக் குழு

## பிள்ளைகள் விழா — 1994

# இசைப் போட்டி

எமது ஆதீன நாட்குறிப்பேட்டின்படி எமது ஆதீனப் பிள்ளைகள் வாரம் 10-07-94 தொடக்கம் 16-07-94 வரை அனுசரிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக வழமையான பாடல் போட்டிகளுக்குரிய ஆயத்தங்கள், தீர்மானங்கள் என்பன 15-03-94 நடைபெற்ற சங்கீதக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டன. எமது முதலாவது குழுப் பாடற் பயிற்சி இம்மாதம் 13-ம் திகதி புதன்கிழமை காலை 9-00 மணிக்கு மானிப்பாய்த் தேவாலயத்தில் நடைபெறும்.

## இசைப் போட்டி

**குழுப் பாடல் போட்டி**

| | | | |
|---|---|---|---|
| 1. | கீர்த்தனை | 02 | — வந்தருள் இவ் ஆலயத்தில் ......... |
| 2. | கீர்த்தனை | 133 | — கும்பிடுகிறேன் நான் ......... |
| 3. | கீர்த்தனை | 211 | — இன்னும் தாமதமேன்? |
| 4. | கீர்த்தனை | 239 | — அருட்பெரும் ஜோதி, |

**தனிநபர் பாடல் போட்டி**

(30-06-94 இல் வயதெல்லை கணிக்கப்படும். பாடல்கள் யாவும் எமது ஆதீனப் பாடற் புத்தகத்தில் எடுக்கப்படல் வேண்டும்.)

| பிரிவு | | பாடல் |
|---|---|---|
| 1. 08 வயதுக்குட்பட்டவர்கள் | — | ஏதாவது ஒரு கீர்த்தனை இராக தாளத்துடன் பாடப்படல் வேண்டும். |
| 2. 12 வயதுக்குட்பட்டவர்கள் | — | 03, 209 (விரும்பிய இராகத்தில்) |
| 3. 16 வயதுக்குட்பட்டவர்கள் | — | 100, 205 (விரும்பிய இராகத்தில்) |
| 4. 19 வயதுக்குட்பட்டவர்கள் | — | விருத்தம் 08, 15 பின்வரும் ஏதாவது நான்கு இராகங்களில் பாடப்படல் வேண்டும். பூபாளம், பிலகரி, மோகனம், கம்சத்வனி, மத்தியமாவதி, சுத்தசாவேரி) |
| 5. 24 வயதுக்குட்பட்டவர்கள் (வாலிபர் பிரிவு) | — | விருத்தம் 66 - இராகமாலிகை (கல்யாணி, சண்முகப்பிரியா, பந்துவராளி, தோடி, அரிகாம்போதி, கரகரப்பிரியா) |

**இசைக்கருவி மீட்டல் போட்டி**

| பிரிவு | | பாடல்கள் |
|---|---|---|
| 1. 12 வயதுக்குட்பட்டவர்கள் | — | கீர்த்தனை 123, 316 |
| 2. 16 வயதுக்குட்பட்டவர்கள் | — | கீர்த்தனை 117, 236 |
| 3. 19 வயதுக்குட்பட்டவர்கள் | — | கீர்த்தனை 198, 106 |
| 4. 24 வயதுக்குட்பட்டவர்கள் (வாலிபர் பிரிவு) | — | தென் இந்திய திருச்சபைத் திருவிருந்து சங்கீத முறை ஆராதனை ஒழுங்கிலுள்ள பாடல்களுடன் கீர்த்தனைகள் 185, 257 333 என்பனவற்றுள் ஏதாவது ஒன்று. |

பிள்ளைகள் இப் போட்டிகளில் கலந்துகொண்டு சங்கீத அறிவை வளர்த்து எமது திருச்சபைகளில் கர்நாடக இசையைப் புத்துயிர் பெற உதவுமாறு ஊக்குவியுங்கள்.

நன்றி

இயக்குநர்,
சமயக் கல்விக் குழு.

### தாரகை ஒளி

*தனது கடமையைத்தான் நடாத்திக் கொண்டுவந்தால் விஞ்ஞானத்திற்கும் சமயத்திற்கும் ஒரு விவாதமும் ஏற்படமாட்டாது விஞ்ஞான உலகத்தின் எல்லைகளைப் பல விஞ்ஞான நிபுணர்கள் இப்பொழுது உணர ஆரம்பித்து விட்டார்கள் என்பது அதிக தைரியத்திற்கிடமானது?*

— பேராயர் சபாபதி குலேந்திரன்.


# உதயதாரகை

ஆதின காரியாலயம், வட்டுக்கோட்டை.

Estd. 1841

மலர்: 155 22 - 04 - 1994 இதழ்: 09


## தூய ஆவியானவர்

வில்லியம் பார்கலே (WILLIAM BARCLAY) இந்த நூற்றாண்டில் வாழ்ந்த தலைசிறந்த புதிய ஏற்பாட்டு அறிஞர்களில் ஒருவர். அவர் தூய ஆவியானவர் பற்றிக் கூறும் கருத்துப் பின்வருமாறு—

''நான் தூய ஆவியானவரை விசுவாசிக்கிறேன். ஆனால் தூய ஆவியானவர் வேறு. அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் பரந்து நிற்கும் உயிரத்தெழுந்த ஆண்டவர் வேறு என்று எண்ண என் மனம் தயங்குகின்றது. தூய ஆவியானவரின் வருகையே சீடர்களின் தனிமையைப் போக்கும் (யோ 14 : 18) தூய ஆவியானவரே இயேசுபிரான் என்ன கூறினார் என்று அவர்களுக்கு ஞாபகமூட்டுவார். (யோ. 14:26) தூய ஆவியானவரே மனிதனின் பாவத்தையும் இயேசுபிரானின் தூய்மையையும் நிரூபித்துக் காட்டுவார். (யோ. 16:7-11) தூய ஆவியானவரே முழுச் சத்தியத்தையும் மனிதர் அறியும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புறப்படாதிருங்கள்

சென்ற வாரம் இங்கை வான்படை தென்மராட்சிப் பகுதியில் மீண்டும் குண்டுகளை வீசியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படியான யுத்த சூழலில் வாழ்ந்த எரேமியா தீர்க்கர் கூறுவதனை ஆய்ந்து நோக்கல் அவசியமானதாகும்.

> நாங்கள் யுத்தத்தைக்காணாததும் எக்காளச் சத்தத்தைக் கேளாததும், அப்பத்தாழ்ச்சியினாற் பட்டினியாய் இராததுமான எகிப்து தேசத்திற்கே போய் அங்கே தரித்திருப்போமா என்று சொல்வீர்களாகில்
>
> எரே 42 : 14

நமது நாட்டிற் காணப்பட்ட சூழல் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் யூதேயா தேசத்தில் உருவாகிக்கொண்டிருந்தது. யூதேயா வாலிபர்களின் செயல்கள், பாபிலோனுக்குக் கட்டுக்கடங்காத கோபத்தை உண்டாக்கின. வெகுவிரைவில் பாபிலோனியரின் நாசகாரப் படைகள் யூதேயாவுக்குள் புகுந்து, மக்களைத் துன்புறுத்தப் போகின்றன. இதுவரை காலமும் போர்களினால் அலலற்பட்டு ஆற்றாது கண்ணீர் வடித்த யூதமக்கள், தொடர்ந்து வரவிருந்த பேரழிவை நினைத்து ஏக்கமடைந்தார்கள். இத்தகைய சூழலிற் போர்ப்பறையே கேட்காத எகிப்துக்குச் சென்றுவிடலாம். அங்கு வேண்டியளவு உணவு கிடைக்கும் என்று, இஸ்ரவேல மக்கள் எண்ணத் தலைப்பட்டனர். அந்த வேளையிலேதான் எரேமியா தீர்க்கதரிசி அவர்களைப் பார்த்துக் கடிந்துகொள்ளுகின்றார். யூதேயாவிலே பசி, பட்டயம், பாழ், கொள்ளை நோய் என்று பயப்படுகிறீர்கள். இந்தத் துன்பங்களெல்லாம் எகிப்திலும் தொடரப்போகின்றன! உங்களை இந்த நாட்டை விட்டுப் புறப்பட வேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார்!! நீங்கள் இந்த இடத்தை விட்டுச்சென்றால், உங்கள் நாடு முற்றாக அழிந்து போய்விடும்! உங்களைத் தமது நம்பிக்கைக்குரியவர்களாக இந்த நாட்டில் வைத்திருப்பதே கடவுளின் திட்டமாக இருக்கிறது. உங்களுக்கூடாகவே கடவுள் தமது மீட்பின் திட்டத்தை நிறைவேற்றவிருக்கின்றார். இந்த நாட்டை விட்டு ஓடுவீர்களேயாயின், கடவுளின் சாபத்தை நீங்கள் தேடிக்கொள்வீர்கள் என எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தார்.

ஆனால் யூதேயா நாட்டு மக்கள் அவரின் வார்த்தைக்குச் செவிகொடுக்கவில்லை. தாம் எகிப்துக்குத் தப்பியோடியது மட்டுமன்றி, எரேமியாவையும் அந்த நாட்டிற்குப் பலவந்தமாக இழுத்துச் சென்றார்கள். எரேமியா மனமுடைந்தவராய் எகிப்திலே இறந்தார்.

எரேமியா தப்பிப் பிழைக்க வழிதேடுபவர்களைக் கண்டு சினமடைந்தார். தப்பிப்பிழைக்க வழிதேடுவது கிறிஸ்தவ விசுவாசிக்கு உரியபண்பன்று. குடும்பவாழ்வு என்ற தளையிலிருந்து தப்பிப்பிழைக்கச் சிலர் வகை தேடுகின்றனர். சோதனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளச் சிலர் வகை தேடுகின்றனர். சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளச் சிலர் முனைகின்றனர்.

இன்று நம்மைச் சூழ, தப்பியோட வழிபார்க்கும் மக்களை எங்குங் காணலாம்.; நாட்டில் ஏற்பட்டிருக்கும் உள்நாட்டுப் போரின் காரணமாக அழகைக்குரல், குண்டு வீச்சு விமானங்களும, ''ஷெல்'' அடிகளும் மக்களைக் கதிகலங்க வைக்கின்றன.

''புலம்பலும், அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள்.'' (மத்தேயு 2 : 17)

இந்தச் சூழலிலே நாம் என்ன செய்வது? 1983 ஆண்டேற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து நமது நாட்டவர் பலர் கனடாவுக்கும், அவுஸ்திரேலியாவுக்கும், இங்கிலாந்திற்கும் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குஞ் சென்று குடியேறி விட்டார்கள். சிலர் இந்த நாடுகளிலே சௌகரியமாக இருக்கின்றனர். பலர் அகதிமுகாமகளில உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இன்று ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் போரின் காரணமாக ஒரு இலட்சம் மக்கள் அகதிகளாக இந்தியாவுக்குச் சென்றுவிட்டனர். இங்கிருக்கும் ஏனையவர்கள் கனடாவையும், அவுஸ்திரேலியாவையும் நினைத்துப் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கின்றனர். பலர், ''ஏன் பிறந்தனன் இத்துயர் நாட்டிலே?'' என்று உள்ளத்திலே குமுறிக்கொண்டிருக்கின்றனர்.

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து சீடர்களை விட்டுப் பிரியும் பொழுது' ''எருசலேமை விட்டுப் போகாமற் காத்திருங்கள்'' என்றுதான் அறிவுரை கூறினார். பொறாமையும், விரோதமும், பாதகமும் நிறைந்த எருசலேமிலேதான் உங்கள் பணி சிறக்க வேண்டுமென்றுதான் அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்தச் சூழலிலே நாம் என்ன செய்ய வேண்டும்? முதன் முதலாக நமது நிலைமையை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். எம் ஒவ்வொருவருக்கும் கடவுள் ஒவ்வொரு திட்டம் வைத்திருக்கின்றார். மூப்பு, பிணி, சாக்காடு என்பன நாம் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், நம்மை அணுகாமல் விடப்போவதில்லை. எமக்குக் கொடுக்கப்பட்ட வாழ்க்கையை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, கடமைகளைத் திருப்தியாகச் செய்து முடிப்பதே நல்ல நெறி.

''ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கப், பாரமான யாவற்றையும் நம்மை எளிதில் அகப்படுத்துகின்ற பாவத்தையும் விலக்கி, விசுவாசக் கர்த்தாவும், விசுவாசம் பூரணருமாகிய இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கின்ற ஓட்டத்திற் பொறுமையோடு ஓடக் கடவோம்.'' (எபிரேயர் 12 : 1)

''எல்லா நிலவரத்திலும் சந்தோஷமாக இருக்கக் கற்றுக்கொண்டேன்.'' (பிலிப் 4 : 11) என்கிறார் பவுல். நாம் எகிப்துக்குச் சென்றாலும், வேறு எந்த நாட்டுக்குச் சென்றாலும், எமது மகிழ்ச்சி எமது மனதைப் பொறுத்ததே என்பதே எரேமியாவின் வாதம். மனதிலே உறுதியான விசுவாசமிருந்தால், நமது மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் எவராலுமே சிரழித்துவிட முடியாது. ஒரு முறை ''சமாதானம்'' என்ற பொருளில் இரு ஓவியர்கள் படம் வரைந்தார்கள். ஒருவர் அழகிய மலைச்சாரல் ஒன்றை வரைந்தார். அழகான மரங்கள்; தெளிந்த நீரோடை; அன்னப் பறவைகள்; பூரணமான அமைதி. இந்தப்படத்துக்கு அவர் சமாதானம் என்று பெயர் கொடுத்தார். மற்றையவர் கடும்புயலிற் சிக்கியுள்ள தென்னந் தோப்பை வரைந்தார். அந்தத் தென்னந்தோப்பில் ஒரு சிறுமரத்திற் குருவிக் கூடு; குருவிக்கூட்டிற்குள் குருவி தனது குஞ்சுகளைச் செட்டைகளுக்குள்ளே அரவணைத்துக் கொண்டிருந்தது. குஞ்சுகள் ஆனந்தமாகத் தூங்கிக்கொண்டிருந்தன. இதனை வரைந்தவரும் ''சமாதானம்'' என்றே தனது படத்திற்கு மகுடமிட்டார். இப்படிப்பட்ட சமாதானமே, கடவுளால் அருளப்படுகின்ற சமாதானம். துப்பாக்கி வேட்டுக்கள், குண்டு வீச்சுக்கள், ஷெல்லடிகள் மத்தியிற் கிறிஸ்தவ விசுவாசி உண்மையான சமாதானத்தைப் பெறுகின்றான்.

இரண்டாவதாக உண்மையான விசுவாசிக்குத் தடைக்கற்களே படிக்கற்கள் ஆகின்றன. ஜோன் பனியன் என்பார் சிறைக்கூடத்திலிருந்த போதுதான், ''மோட்ச பிரயாணி'' என்ற உன்னதமான காவியத்தை எழுதி முடித்தார். ஜோன் மில்ரன் என்ற கவிஞர் கண்களை இழந்த போதுதான், மிகச்சிறந்த கவிதைகளை இயற்றி வழங்கினார். ஜவஹர்லால் நேரு ஒரிடத்தில சாதாரண மக்கள் சிறைக்குள் தள்ளப்பட்டால வேதனைப்படுவார்கள். ஆனால எழுத்தார்வங் கொண்டவன் சிறைக்கூட ''நாட்களையே தனது வாழ்வின் மிக இனிப்பான பகுதியாகக் கருதுவான்.'' என்று குறிப்பிட்டுள்ளார். இன்று பல கஷ்டங்கள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கின்றன என்பதை நாம் மறுக்க முடியாது வீட்டைவிட்டு வெறியேற முடியாதவாறு ''ஊரடங்குச் சட்டம்'' போடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த நாடகளில் எமது ஆன்மாவுக்கு ஆரோக்கியத்தைத் தரும் அநேக காரியங்களைச் செய்து முடித்து விடலாம். தியானம், ஜெபம், மன்றாட்டு என்பனவற்றுக்கு இது மிகவுயர்ந்த காலமாகவிருக்கின்றது. அறிவர் இராதாகிருஷ்ணன் தனது பலத்தின் அடித்தளம், தனது தனிமைப் பொழுதுகளதான் என்று குறிப்பிட்டுள்ளார். ஆகவே, இந்தக் காலகட்டத்தை கடவுள் நமக்குக் கொடுத்த ஒரு பெரும் பேறு எனக் கொள்ளவேண்டும. இந்தக் காலத்தைத் தொடர்ந்து நமது நாட்டிலே எத்தனையோ மகான்களும, கவிஞர்களும், சிந்தனையாளர்களுந் தோன்றப்போகின்றார்கள். மூன்றாவதாக,

இக்காலகட்டத்தை நாம் கடவுளினாலே அருளப்பட்ட ஓர் ஆசீர்வாதமெனக் கொள்வதோடமையாது, நாமும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக விளங்க வேண்டும். இன்று பட்டினியால் அநேக மக்கள் இறந்து கொண்டிருக்கின்றனர். போர் விமானங்களின் இரைச்சல்களினாலும, குண்டு வீச்சுக்களினாலும் ஏக்கமடைந்துள்ள கர்ப்பிணித்தாய்மார் ஏராளம்! ஏராளம்!! தம் அரும் புதல்வர்கள் துடிதுடித்து இறந்ததனைக் கண்டு, பித்துப் பிடித்து அரற்றுந் தாய்மார் பலரிருக்கின்றார்கள். இந்த நேரத்திலே மரணத்தின் வேதனையை ஜெயித்த இயேசுபிரான் அடியவர்களாகிய நாம் ஆற்ற வேண்டிய பணிகள் அதிகமுண்டு.

> ''நாயினுங் கீழாய்ச் செந்தமிழ்நாட்டார்
> நலிவதை நான் கண்டும்;
> ஓயுதலின்றி, அவர்நலம் எண்ணி
> உழைத்திடநான் தவறேன்!''

என்கிற உன்னத இலட்சியத்தை நெஞ்சமதில் நிலைநிறுத்திப் பணிசெய்ய விழைவோமாக. அந்தப்பணி நமக்குப் பரிபூரண திருப்தியை அளிக்கும். இயேசுபிரான் துன்பத்திற்குரிய காரணங்களை எடுத்து விளக்கவில்லை; கண்ணீர் துடைக்கும் பணிகளிலே ஈடுபடுங்கள் எனக் கூறினார்.

இந்த அரும்பணியை விட்டுவிட்டுத் தப்பிப் பிழைக்க முயலுவது கிறிஸ்தவ அறமாகாது. நமக்குக் கொடுக்கப்பட்ட வாழ்க்கையைப் பூரண திருப்தியுடன் ஏற்றுக் கொள்வோம்.

அத்தியட்சர் எழுதும்

# அவுஸ்திரேலிய நினைவுகள்

**டிசம்பர் 2ஆம் திகதி வியாழக்கிழமை**

மெல்போர்ணில் மாலையும் காலையுமாயிற்று இது இரண்டாம் நாள். பல வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற நண்பர்கள், உறவினர்கள், திருச்சபை அங்கத்தவர்கள் என்னைச் சந்திக்க வந்தனர். டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி என்னைச் சந்திப்பதற்காகத் திரு. எஸ். செல்வரத்தினம் அவர்கள் குடும்பத்தினருடன் வந்தார். இவர் உடுவிலிலும் பின்னர் தெல்லிப்பழையிலும் வாழ்ந்து மறைந்து போன திரு. ஈ.ஆர். சபாரத்தினம் அவர்களுடைய மகன் அதாவது வண. ஈ. கே. இயேசுதாசன் போதகரின் பேரன் இவருடைய மகளின் திருமணம் அடுத்தவாரம் நடைபெறவிருந்தது. என்னை அந்தத் திருமண ஆராதனையை நடாத்தும்படி கேட்டார். நான் அடுத்தவாரம் பிரிஸ்பேன் போவதாகத் திட்டம். ஆகவே அவருடைய வேண்டுகோளை ஏற்கமுடியாது போயிற்று.

அன்று மத்தியானம் திருமதி இராணி எலியேசர் தமது காரியாலயத்திற்கு வரும்படி அழைத்தார். திருமதி எலியேசர் அகதிகள் புனர்வாழ்வுப் பணியிலும், நீதிக்கும், சமத்துவத்திற்குமான இயக்கத்திலும் மிகுந்த ஆர்வத்துடன் உழைத்து வருகின்றார் நாயினும் கீழ்ச் செந்தமிழ் நாட்டார் நலிவதனைக் கண்டு அவர்களின் துன்பங்களைத்துடைக்க அயராது பாடுபட்டு வருகின்றார். இவருக்கு ஏராளமான செல்வாக்கு மிக்க ஆங்கிலேயர் நண்பர்களாகவிருக்கின்றனர். ''தமிழ் அப்டேற்'' என்னும் பத்திரிகையை வெளியிடும் அவுஸ்திரேலிய அன்பரும் இத்திருச்சபைக் காரியாலயத்திலேயே பணியாற்றி வருகின்றார். திருமதி இராணி எலியேசர் துணிச்சல் மிகுந்த தலைவி ஏறத்தாழ முப்பது வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவுக்குச் சென்று குடியேறியமையால் அவருக்கு அந்த நாட்டின் விவகாரங்கள் நன்கு தெரியும் அரசாங்க அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கும் நிலையில் இருக்கின்றார். இவர் செய்துவரும் தொண்டுகட்கு இலங்கைத் தமிழர் என்றும் நன்றியுடைவராக இருத்தல் வேண்டும்.

இராணி எரியேசரின் காரியாலயத்தில் இருந்தபொழுது, வண. எஸ். எஸ். அருளம்பலம் (Bubsy) அவர்கள் அங்கு வந்தார். அவர் பணியாற்றுகிற, ஐக்கியப்படும் திருச்சபையில் அன்று ஒரு பிரியாவிடைக்கூட்டம், முதலாவதாக ஐக்கியப்படும் திருச்சபையின் தலைவியைச் (மொடறேற்றர்) சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

ஐக்கியப்படும் திருச்சபையின் மொடறேற்றராக ஒரு பெண்மணி இருப்பதனைக்கண்டு நான் பெருமகிழ்ச்சியடைந்தேன். மேனாடுகளிலே சிறிது சிறிதாக பெண்களின் செல்வாக்கு வளர்ந்து வருகின்றது. எல்லா நாடுகளிலும் பெண்களே விசுவாசிகளில் பெரும்பான்மையினராகவிருக்கின்றனர். திருச்சபையை அவர்களே நடத்துவது சாலப் பொருத்தமானதாகும். அம்மையாருடன் உரையாடிய பின்னர் ஐக்கிய திருச்சபையின் பிரியாவிடைக் கூட்டமொன்றிற்குச் சென்றேன். இத் திருச்சபையிலிருந்து இந்தியாவுக்கு மிஷனரியாகச் செல்லும் ஒருவருக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை அது. எனவே தென் இந்திய திருச்சபைப் பேராயர் அங்கு பேசுவது சாலப் பொருத்தம் என்றுஎண்ணி என்னை அங்கு அழைத்துச் சென்றனர். அத் திருச்சபையின் முக்கியமான உறுப்பினர்கள் அவ்விழாவிற்கு வந்திருந்தனர். எமது ''அத்தியட்சாதீன - சங்கம்'' போன்ற ஒரு அமைப்பு. பிரியாவிடை தொடங்கி முடியும் வரை எல்லோரும் நின்றனர். அந்த மண்டபத்தில் ஆசனங்களே இருக்கவில்லை. தேனீர். குக்கீஸ், என்பன பரிமாறப்பட்டன. பின்னர் உரைகள், பதிலுரை, அன்பளிப்பு எல்லாம் நடைபெற்று முடிந்தன அரை மணி நேரத்தில் மிகமுக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்ட இக்கூட்டம் நடந்து முடிந்துவிட்டது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் நேரத்தை எவ்வாறு மிச்சப்படுத்துகின்றனர். என்று கண்டு வியந்தேன். நமது நாட்டில் அப்பிரியாவிடை ஒரு நாள் விழாவாக நடைபெற்றிருக்கும்.



இரண்டாம் திகதி இரவு மெல்போர்ண் நகரத்து இலங்கைத்தமிழர் ஒன்றியத்தில் பேசும்படி கேட்டுக் கொண்டனர். மெல்போர்ண் இலங்கைத் தமிழர் ஒன்றியத்திற்கு வைத்திய கலாநிதி இராஜகுணாளன் இராசையா தலைவராக விளங்குகின்றார். அன்றைய விருந்துபசாரத்தில் மெல்போர்ணில் வாழும் செல்வம்மிக்க தமிழர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. வழமையான கேள்விகள், உரையாடல்கள் நடைபெற்றன. பின்னர் வானொலிக்காக சில கேள்விகளையும் பதில்களையும் நாடாவிற் பதிவு செய்து கொண்டனர். யூதர்கள் உலகின் எந்தப்பாகத்தில் சிதறுண்டு வாழ்ந்தாலும் அவர்களின் மனம் எருசலேமையே நோக்கி இருப்பதனைப் போல, இலங்கைத் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் யாழ்ப்பாணத்தையும் தமது இளமைப்பராயத்தையும் அன்போடு நினைவு கூருகின்றனர். யாழ்ப்பாணத்து அத்தியட்சரை, யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியாகவே எண்ணுகின்றனர். அடுத்த சந்ததி இப்படி நினைக்குமா? என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

மாலையும் காலையுமாயிற்று இது மூன்றாம் நாள் அன்று நான் ஆவலோடு பார்த்திருந்த ஒரு குடும்ப சந்திப்புக்கு என்னை அழைத்துச் சென்றனர் எனது தாயார் அன்பு மச்சான் திருமதி ஏ. சி. ஜே எலியேஸர் வீட்டில் அன்று விருந்துபசாரம் இக்குடும்பத்தினர் சமீபத்தில் தமது திருமணத்தின் ஐம்பதாவது வருட நிறைவுவிழாவைக் கொண்டாடினர். உலகின் பல பாகங்களிலிருந்தும் உறவினர்கள் சென்று தம்பதியினரை வாழ்த்திச் சென்றனர் அப்பொழுது அங்கு செல்ல முடியவில்லையே என்ற ஏக்கம் என்னுள்ளத்தில் குடிகொண்டிருந்தது. மறைந்துபோன எனது தாயாரின் நினைவுகளைச் சுமந்த வண்ணமே திருமதி கிருபைஎலியேசர் வீட்டிற்கு சென்றேன். மெல்போர்ணில் உள்ள அவர்களுடைய பிள்ளைகளும் மருமக்களும் அங்கு வந்திருந்தனர்.

## தென்னிந்திய திருச்சபை நிவாரணம்

தென்னிந்திய திருச்சபையின் புனர்வாழ்வுப் பணியம். யாழ்ப்பாணத்திலுள்ள பல முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு சென்றவாரம் உடைகளை வழங்கியது மானிப்பாயிலுள்ள தென்னிந்திய திருச்சபை முகாங்கள் 1,2,3, புனித அந்தோனியார் முகாங்கள் 12, வட்டுக்கோட்டையிலுள்ள இடம் பெயர்ந்த மக்கள், உடுவில் மேஜர் சண் முகாம், பண்டிதர் குடியிருப்பு முகாம் கெற்பலி, ஆகிய முகாம்களிலுள்ள சுமார் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இவ்வுதவியைப் பெறறுக்கொண்டனர்.

---

யாழ்ப்பாணத்தைப்பற்றியும், உறவினர்களைப்பற்றியும் கேட்டபடியேயிருந்தனர். குறிப்பாக நமது திருச்சபை ஊழியர்கள்வரை நவேந்திர அனுகூலன், சகோதரர் லோறன்ஸ், வண. தேவகுணானந்தன் பற்றி அறிய ஆவலாயிருந்தனர். இக்குருமார் யாவரும் திரு. செபரத்தினம் எலியேசரின் மிக நெருங்கிய உறவினர்கள்.

அன்றுமாலை மெல்போர்ணில் உள்ள தேவாலயம் ஒன்றில் தமிழில் வழிபாடு நடத்தும்படி கேட்டிருந்தனர். இந்த ஆலயத்திலேதான் நான் அத்தியட்சராக அபிடேகம் பண்ணப்பட்ட நாளில் ஒரு வழிபாடு நடைபெற்றது. கிறிஸ்மஸ் செய்தியை அன்று தமிழில் வழங்கினேன். இந்த வழிபாடு முடிந்த பின்னர் திரு. தியாகராசா தம்பதியினர் என்னைச் சந்தித்தனர். திரு. தியாகராசா வண டி. எஸ். தியாகராசாவின் சகோதரர் திரு. ஜே. வி. அமரசிங்கத்தின் பேர்த்தியை திருமணம் செய்துள்ளார்.

அடுத்தநாள் எனது மெல்போர்ண் விஜயத்தின் கடைசித் தினம். எனவே பலரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவிருந்த வே. காசிநாதன், நலமாய சகோதரர்கள் அவுஸ்திரேலிய மதகுருமார் வந்து சென்றனர். அன்று மதியம் வண. S. S. அருளம்பலம் வீட்டில் விருந்துபசாரம் Bubsy போதகர் யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தைப் பற்றி ஆவலோடு கேட்டறிந்தார். அன்று மாலை யாழ்ப்பாணக்கல்லூரி பழைய மாணவரின் விருந்துபசார விழாவிற்குத் திரு R. தேவராஜன் தலைமை தாங்கினார். திருமதி ஹட்சன் செல்வராஜா வரவேற்புரை நிகழ்த்தினார் திருமதி தம்பியப்பாவின் சகோதரர்கள் ( Bonney Brothers) உற்சாகமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தனைக் கண்டேன். அன்று வண. இராஜதுலேந்திரனின் மகனின் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது.

5 ஆம் திகதி காலை ஞாயிறு மெல்போர்ணிலுள்ள தேவாலயத்தில் பிரசங்கம், அதனைத் தொடர்ந்து ஆகாயவிமானதத்திற்கு செல்வது என்று திட்டம், Camber Well தேவாலயத்தில் அவுஸ்திரேலிய மதகுருமாரே வழிபாடு நடத்தினர். நான் இலங்கை நிலைவரத்தை அடிப்படையாக வைத்துப் பிரசங்கம் செய்தேன். சபைப் போதகர் சிமித் அவர்கள் மிகநல்ல மனிதர்; மகான். அவருக்குப் பிரியாவிடை கூறிவிட்டு என் மைத்துனரின் மோட்டார் வாகனத்தில் ஏறினேன். உறவினர்கள் பலர் விமானநிலையம் வரை வந்தனர். அவர்களைப் பிரிவது மனதிற்குக் கஷ்டமாகவிருந்தது. We Meet to part and part to meet என்று கூறிவிட்டு விமான நிலையத்தின் உட்பகுதிக்குச் சென்றேன்.

## திருமணம்

**ஜெயராசசிங்கம் — சுகந்தினி**

எப்ரல் மாதம் 11 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 3 – 00 மணிக்கு தென்னிந்தியதிருச்சபை யாழ் ஆதினத்தின் நவாலி ஆலயத்தில் திரு. திருமதி ஜெ. பி அருமைநாயகம் தம்பதிகளின் புதல்வி செல்வி சுகந்தினிக்கும், திரு திருமதி ஏ. சின்னத்துரைதம்பதிகளின் புதல்வர் செல்வன், ஜெயராசசிங்கத்திற்கும் பரிசுத்த விவாகம் நடைபெற்றது.

விவாக ஆராதனையை வண வி. என். தர்மகுலசிங்கம், கிறிஸ்தவ சேவா ஆச்சிரம முதல்வர் வண சாம் அல்பிரட் அவர்களின் உதவியுடன் நடாத்தினார்.

வண, எஸ். எஸ் ஞானராஜ் வேத வாசிப்பு நடாத்தினர். வண. டி ஆர், அம்பலவாணர், அருளுரை யாற்றினார் மணமக்களுக்கு ''உதயதாரகை'' தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

---

## தூய ..

(5 ஆம் பக்க தொடர்ச்சி)

படி அவர்களை வழிநடத்துவார். (யோ 16:13) G.H.C. Macgregor என்னும் அறிஞர் தூய ஆவியானவரை இயேசுபிரானின் மறுவடிவம் (Alter Ego) என அழகாக வர்ணித்துள்ளார். இதையே பவுல் அடிகளாரும் இப்பொழுது ஆண்டவர் ஆவியாக இருக்கின்றார் என்று குறிப்பிட்டார். தூய ஆவியானவரும், உயிர்த்தெழுந்த ஆண்டவரும் ஒரே செயலையே செய்கின்றனர் என்று நம்புகின்றேன்.''

விசுவாச அறிக்கை,

**வில்லியம் பார்க்ளே.**

---

## தீர்க்க...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னைய தலைவர்கள் யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டே தமது போராட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டனர். செல்வா இப்போக்கை நிராகரித்துத் தமிழ் மொழி பேசும் மக்கள் என்ற எண்ணக்கருவில் இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள், முஸ்லீம்கள் அனைவரையும் இணைத்துத் தமிழ் பேசும் மக்கள் என அழைக்கும் ஒரு பிரிவினைரைத் தோற்றுவித்தார்.

மரபுவழித் தாயகக் கோட்பாட்டை முன்வைத்தார். வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர் பாரம்பரிய பிரதேசம் என்பதனை வலியுறுத்தியதோடு அப்பிரதேசங்களில் மாநில சுயாட்சியை ஏற்படுத்தவேண்டும் என்றார்.

தமிழ்மொழி தமிழ் இனத்தின் பிரிக்கமுடியாத ஜீவாதார உண்மை, மொழி அழிந்தால் அந்த இனம் அழிந்துவிடும் என்பதனை யதார்த்தமாகக் கண்ட செல்வா மொழியைப் பாதுகாப்பதிலும், அவ்வுரிமையை நிலைநாட்டுவதிலும் அதிக அக்கறை காட்டினார்.

இவற்றையெல்லாம் ஜனநாயக அடிப்படையில் அகிம்சை போராட்டங்களின் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என நம்பி நீண்டகாலம் அகிம்சைப் போராட்டங்களை நடத்தி வந்தார். இவற்றில்வெற்றி பெறமுடியாது, ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள் எல்லாம் பயன் அற்றது எனக்கண்ட செல்வா இறுதியாகத் தமிழ்த் தேசிய இனம் தனது சுயநிர்ணய உரிமையின்படி பிரிந்து தனிநாடு அமைப்பதே சாத்தியமானது என் இறுதியாக தீர்க்க தரிசனம் கூறினார்.

# MIRIAM'S SONG OF LIBERATION

## COMMENT ON EXODUS 15: 20 — 21

The Song of Miriam (Exodus 15:21) is one of the shortest pieces of Israelite poetry. But it is pregnant with meaning. Miriam is introduced as a prophetess and sister of Aaron. Aaron is mentioned elsewhere as a brother of Moses and as his spokesman. But, Moses is not mentioned in this section. Whatever it may be Miriam is considered to be a leader besides Moses and Aaron in Micah 6:3-5. There is a wide range of argument regarding the place of Miriam's song in connection with the Song of the Sea (Ex 15:1-18) which portrays Moses as one who takes the lead in the singing. Miriam's song is dealt with independently in this essay.

Miriam's singing is introduced in the passage by verse 20, which says that when she went out all the women went after her with timbrels and dancing. Miriam was leading the group of women in singing the victor of liberation. It can be observed in the Bible that the Jewish women were accustomed to celebrate victories in this manner (e. g., Judges 5:1ff; 11:34; 1 Samuel 18:6,7). It has a special notion here. It is a liberation song of a community which was until then oppressed. This song has two sections. The first is an invitation It begins with a Summons to praise the Lord, "Sing to the Lord". This summons is followed by a Reason to Praise God which is introduced by the word 'for'. The motive of praise is followed by a further ascription which portrays Yahweh's power. God is praised for his greatness and strength and his greatness manifests in what he is and what he does. Miriam makes obeisance to the tremendous power of God and sings how such a God exercises power. Even the greatest human power is nothing against God's might. It is to be noted that Yahweh is portrayed here as the sole agent of liberation.

Miriam and other women sing about what Yahweh had done. When they experienced the action of Yahweh they could not be speechless. Miraculous power of God created speech in them. They immediately began to dance and sing. Their hymn looked back to the miraculous event afresh. Their action of celebration evoked the memory of their past. The liberation movement really began with the courageous acts of civil disobedience of two mid-wives. It continued when Israelites felt about their own oppression and cried to their God. And when God saw the affliction of the people, heard their cry, had known their sufferings and that he had come down to deliver them, the whole thing moved further towards liberation. And now after a long struggle the oppressor Pharoah unwillingly released the oppressed Israelites to go out of Egypt. So the cry of 15:20-21 is the transformation of the cry of 2:23-25 just as Sarah's doubting laugh of Genesis 18 becomes the celebrative laugh of Genesis 21.

Now when they were experiencing the long awaited liberation, they explained the reason for their celebration. The reason was such a powerful one that made them dance and sing. The credibility of the summons issued by Miriam very much depended on the reason they gave. In a way women only started the act of liberation (mid-wives) and now the women were singing the spirit of liberation. It is very important to note that Israel's praise of Yahweh's Kingship was in the lips of the liberated slave women.

Until then the only power they saw was the power of Pharaoh. Now when they saw the power of Yahweh, they felt that they were freed from pain and despair. When the 'freedom' was felt, it did require singing and dancing. So, the women were singing against Pharaoh. They were dancing towards freedom. The voice of freedom could not be submerged. It had to be articulated. Infact the liberation was not completed until Miriam sang!

The song of Miriam portrays Yahweh as a warrior God who comes to the rescue of the weak and the helpless. Miriam's reason for her summons is, "For he has triumphed gloriously". Similar reason is given by Second Isaiah, "For the Lord goes forth like a mighty man". (Isaiah 42:13). The reason given by both Miriam and Isaiah is very persuasive. This gives hope for all who are unjustly oppressed, whose voices are pent in. So, whenever the song of Miriam is repeated it gives hope to the oppressed that God did over come Pharaoh and he would over come the Pharaohs of the world.

Gustavo Gutierrez, in his book, "A Theology of Liberation" says that the song of Mary (Magnificat) shows us thanksgiving and joy are connected to the acts of God who liberates the oppressed and humbles the power ful. And the future of history belongs to the poor and exploited (page 208).

The liturgy of freedom must be sung over and over again and when it is sung the hopeless ones are recreated to new life

— **Rev. Daniel S. Thiagarajah**

## UCBWM newsletter features work with Srilanka

**DR. R. G. PORTER**

**The Whole Earth News letter**, which continues the Missonary Herald (founded 1805), house organ for the UCBWM, features in its Winter 1994 issue the story of the JDCSI relationship to the Indiana-Kentucky conference of United church of christ.

The IN—KY conference works together with Asia watch, Amnesty International, the National council of churches of Christ/USA and other denominations such as United Methodists, to channel concern for the SriLankan situation to legislators and the State Department. It calls itself the North American Forum on Sri Lanka.

"The conference effort is two-pronged. One part involves sponsorship of Sri Lankan children through the UCBWM's Child Sponsorship Program and help with building a youth hostel. (Approximately 128 Sri Lankan children are currently being sponsored through the UCBWM child sponsorship program)."

A public forum was held in october with Indiana congressman Lee Hamilton, at New Albany, Indiana, where local congregations were told how they could help as advocates for justice and peace.

Delegates have met with U. N. Human Rights commission representatives in Washington, D C and are "in contact with the earter center in Atlanta, Georgia, who are taking an active interest. (This is the retirement project of president Jimmy earter; it takes a leading role in specific areas of world conflict or need.)

Rev. Paul Jahn of St. Peter and Trinity UCC in Lamar, Indiana, who visited the JDCSI last year, says,

"We've discovered that regional conflicts like the one going on in Sri Lanka are the new threats to world peace. Our country's foreign policy makers are confronted with a radically changed world with the end of the cold war. and are asking their constituents for patience while they wrestle with problems unforeseen or unimagined just five years ago This is a time when the church needs to throw itself into the dialogue about issues of global peace and justice. We need to get involved early, as new policies are being formed"

Jahn came to Sri Lanka to gather information on how the war is affecting the people. He was told that the international community ought to focus on four concerns-attacks on civilians on the Jaffna Lagoon reopening of the ferry service at Pooneryn, lifting of the restrictions on medicine, fuel, building materials, paper and school books halting aerial bombing.

Last fall Congresman Hamilton sent an aide to Sri Lanka, and he himself met later with Sri Lanka's priminister. After Jahn's trip in 1988 the Indiana-Kentucky churches raised $80,000 for refugee housing and a Jaffna hospital. The night Jahn crossed the lagoon last year a navy gunboat got around the armed Tiger boats and attacked the last boats of his convoy. Four people were killed.

We are grateful for the ongoing concern of the Indiana-Kentucky Conference, to which Rev. Daniel Thiagarajah and his wife Thaya were sent as missionaries in 1987/88.

## Leadership Training Programme

Jaffna Christian Union Conducted a full - day seminar on Leadership Training for the Christian students of the Jaffna Schools at the Christan Seva Ashram on 17 th March 1994. The Revd Dr. S. M. Selvaratnam of 'Thodar pagam' and the Revd. D. S. Thiagarajah, Principal, Christan Theological Seminary were the main Speakers of the day.

## Jaffna Central Wins

Jaffna Central beat St. John's College in the 'Battle of the North' Cricket encounter played at former's grounds by seven wickets. This was the first win for Central College since 1970.

( 2 nd page cont.)

lence against women, HIV/AIDS, youth, and ecumenism at the national level.

The plight of women refugees and the violence perpetrated against them was particularly noted and echoed the growing concern of member churches about the escalated incidence of violence against women.

The premiere showing of a new video on violence against refugee women also took place at the Central Committee meeting. Called **Not the same anymore** the video dramatically denounes the vulnerability of refugee women to sexual assault and rape, and appeals for church action to ensure protection and prevention. Copies of the 16 minute video produced by the WCC with support from the UN High Commissioner for Refugees (UNHCR) are available from the WCC Refugee and Migration Service.

P. A. Taran
WCC
February 1994

The Morning Star

Diocesan Office, Vaddukoddai 22 - 04 - 1994

EDITORIAL

## ASCENSION

"Lord, will you at this time restore the kingdom to Israel?" This was a crucial question asked by the disciples just before the ascension of Christ. The risen Christ made two responses to this question, it was not for them to know the times or seasons *(1:7)* and they would receive power to be Christ's disciples *(1:8)*. After this response Jesus was taken up.

Luke reports the ascension in two places. In Luke 24 the ascension is a conclusion, a dramatic end to Jesus, earthly ministry. It says about the one whom Pilate and other powers sought to entomb is taken up in glory. But in the first chapter of Acts, the ascension is the beginning presupposition on which the Church is based. The end becomes the beginning as the story proceeds. Luke, thus, views ascension from two different prespectives and draws from it different implications for the community. According to the Gospel of Luke, Jesus' disciples returned to Jerusalem with great joy, and they were continually in the temple blessing God *(24 : 52 - 53)*. This reminds us of the "great joy" announced to the shepherds These shepherds, when they had seen the baby returned glorifying and praising God *(2:10. 20)*. Joy and praise in the birth narratives are expressed through "blessing God" just as seen as a result of Jesus' ascension The mood of joyful praise of God at the end of Luke's gospel is the same mood that filled the birth stories. The power that could entomb the hopes or the power that could suppress the good news of great joy is now fully gone and that the joy and praise fill the disciples following Jesus' appearance and ascension is shown in Acts as the joy and praise that will continue in the life of the early church.

According to Acts, two kinds of languages are used to describe the events happened in Christ. One is the language of resurrection which speaks about the victory over death and the other is the language of ascension which says about the sitting at the right hand of God and empowerment. The followers of Christ knew that the one served, taught and loved them is the one who now rules for them. This knowledge demands a witness. The time between Ascension and the Parousia - the second coming is the gracious interim to the Church for witness. The angelic reproof, "Why do you stand gazing into the sky"? reminds of the work to be done. The rebuke is a call to action. It is supported by a reminder of responsibility entrusted upon Jesus' witnesses by the Lord who will one day call them to account.

The ancient Ascension Day anthem, Deus Ascendit, "God Has Come Up" does not speak of the One who has gone away from the church but about Him who has gone up to be the empowerment for the church. The Church with the promise of this empowerment is called to express in words and deeds the life - giving work of the spirit.

— D. S. T.

*(1 st page cont.)*

| | | | | |
|---|---|---|---|---|
| MALAWI | — | 822 500 | — | Mozambique |
| ETHIOPIA | — | 710 200 | — | Sudan, Somalia |
| SOMALIA | — | 767 700 | — | Ethiopia, Chad, Zaire, Uganda |
| MEXICO | — | 356 400 | — | El Salvador, Gautemala |
| CHINA | — | 280 500 | — | Vietnam |
| COSTA RICA | — | 278 600 | — | Nicaragua, El Salvdar Cuba |
| BRUNEI | — | 267 500 | — | Rwanda, Zaire, Uganda |
| AUSTRALIA / NEW ZEALAND | — | 102 600 | — | Vietnam |
| THAILAND | — | 99 900 | — | Laos, Cambodia Myanmar *(Burma)* |

Source UNHCR

## U. T. C.

The Valedictory service was conducted on Sunday March 27 th. The Preacher this year was Rev. Dr Stanley. J. Samartha Bishop Vasant Dandin President of the College Council gave away the Diplomas and certificates at this service.

—

## RWANDA

### Some Important Facts

Capital: Kigali, Area 26338 Square km Population 7,603 000 Languages: French, Kinyarwanda, and Swahili.

Literacy 50% Religions: Tribal, Islam, and Christianity.

Currency Rwanda Franc US $ 1 = Rfranc 127 Percapita income $ 310

Formerly it was part of the Belgian Trusteeship of Ruanda — Urundi in East Central Africa

The Republic of Rwanda became an independent State on July 1st 1962

Rwanda is one of the most densely populated Countries of Africa. It is known as a nation of one thousand hills, because of its mountainous nature.

The economy is mainly agricultural and remains at the subsistence level. Coffee, Cotton, Sorghum, Cassava and sweet potatoes are the principal crops. Minerals include, tin ORE tungsten, tantalite, gold and beryl Industry is undeveloped. Live stock raising is widespread and hides and skins are exported.

From Manorama

—

## IN MEMORIAM

Mrs Carmini Jayaseelan wife Mr. A. E. Jayaseelan, mother of Roshan and Nilanthi, daughter of the late Dr and Mrs. S. N. Chelliah daughter in law of the late Mr J. M. Arasaratnam and Mrs. Parimalam Arasaratnam, Sister in law of Indra George, Sagunthala Kadirgamar and Dharmaseelan sister of Pushpamalar Perinpanayagam and Dr. C. C. Mahendran and niece of late Mrs. Roseline Hunt, the late Edwin Black, Dr A K. Black, and Mrs. J. M. Sabaratnam entered glory on the 11 th of March 1994 in England.

—

## OBITUARY

GLADYS RASAMALAR NILES

We are sorry to record the passing away of Mrs. Gladys Rasamalar Niles wife of the late Jeevar Niles a former teacher at Jaffna College, which took place on Sunday the 17th April. The funeral took place on the following day at her residence at No 100, Ambalavanar Road Athiyady Jaffna.

## Dr. Willis G. Parker

Our partners is mission the INDIANA-KENTUCKY conference has sent Dr. Willis G. Parker to give us help and guidance in our Agricultural projects. He arrived in Colombo on the 9 th of April. He will be visiting our projects in Batticaloa, Vavuniya and Kilinochi. He preached at C. S. Ichurch Colombo on Sunday the 10 th April.

—

### Shastiabdapoorthi Celebration of the Madras Bishop

Arrangements are made to celebrate the 60 th Birthday of Rt. Rev M. Azariah in fitting manner. The function will take place at St George's Cathedral this year.

—

### Sri Lanka Political Bickering

Thondaman and the President met each other and are ready to close the rift between the two parties.

★

President Premadasa's wife and children will join the next electioneering to boost the United National party.

★

Mrs. Premadasa will not join the government ceremonies for the late president, but with her children will conduct a separate ceremony for her late husband's one - year-death ceremony called pinkama.

—

### Bomb Scare in Colombo

Recently five bombs exploded in Colombo causing damage to hotels. Two of These bombs, were proximate to two hotels, one of which is financed by America and the other by India A Tamil lad lost his life in this explosion and his head was sighted 261 feet away from the scene of this incident.

—

### Canada bids Peace Settlement

Canada attempts to solve the ethnic imbroglio. The Canadian parliamentarians, with the assistance of a prominent lawyer in Canada, once again asked Mr. S. Thondaman, a Minister in the U. N. P. cabinet, to come to Canada to find a way to resolve the ethnic problem in Sri Lanka.

—

### The Jitters in Colombo

The Defence sources say that fifty L T T E. members have penetrated Colombo with a large quantity of explosive items.

—

(1 st page Cont.)

**May 20 Thursday**
Whitsun Festival Christa Seva Ashram.

**May 30 Monday**
Bishops Consecration - Day.

**June 18th Saturday**
Evangelistic Festval Christa Seva Ashram.

**June 27th monday**
Daniel Poor Day Vaddukoddai

Registered as a News Paper at the P. O. Sri Lanka under No. Q/J/14033 News Printed for the Jaffna Diocesan of the Church of South India. Arun Printers and Publishers 15, 2 nd Lane, Jaffna. on Friday the 22 nd of April 1994 and Published by Mr. T. A. TAMBIYAPPA Diocesan Office, Vaddukoddai.